கைரேகைப் பதிவு அலுவலகம்.

* 641 வின.—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) Finger Print Bureau-ல் பணி ஆற்றுபவர்களுக்கு Crime Special pay அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து அளிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு கருணநிதி : (அ) (இ) இப்பிரிவில் பணியாற்று கிறவர்களுக்கு கிரைம் ஸ்பெஷல் பே அளிக்கும் திட்டம் எதும் இல்லை எனினும் இப் பிரிவில் பணியாற்றும் விரல் ரேகை தேடுபவர்கள். விரல் ரேகை வல்லுநர்கள், விரல் ரேகை பதிவு சூபரின்டென்டென்ட் ஆகியோர் முறையே மாதமொன்றுக்கு ரூ. 15 ரூ. 25, ரூ. 30 என்ற அளவில் ஸ்பெஷல் பே இப்போதும் பெற்று வருகிறார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : விரல் ரேகைப் பதிவு ப்யூரோவில் போதிய பணியாளர்கள் இல்லை என்ற குறை அரசுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறதா ? அதை விஸ்தரிக்கும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : அப்படிப்பட்ட யோசனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு இப்பொழுது தரப்படுகிற ' ஸ்பெஷல் பே ' இன்னும் கொஞ்சம் உயர்த்தப்பட வேண்டும் என்ற செயற் குறிப்புதான் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போலீஸ் கமிஷன் ரிபோர்ட்டில் இம்மாதிரியான ரேகை நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கவேண்டும் என்ற பரிந்துரை இருக்கிறதே, அது சீக்கிரம் அமல் படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : நிதி நிலைக்கு ஏற்றவாறு வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு அமல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் மலபார் காவல்படை

* 642 வின —திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழகத்தில் மலபார் காவல்படை எங்கெங்கு உள்ளது ?

(இ) இப்பிரிவை முடிவு செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : (அ) மலபார் சிறப்பு காவல் படை 1-ம் அணியின் ஒரு பிரிவு திருச்சிராப்பள்ளியிலும் மற்றொரு பிரிவு பழனியிலும் இருக்கின்றன. இரண்டாம் அணி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறில் இருக்கிறது.

(இ) இல்லை.